# 6. ஆகா! என்னே அழகு!

ஊரெல்லாம் மலையுண்டு – அதில்
உருண்டுவரும் அருவியுண்டு



கடலலைகள் விளையாடும் – காட்சி
காணக்கண் ஆயிரம் வேண்டும்



வஞ்சிப்பா பாடி – அங்கே
வஞ்சி மிதந்தோடி வரும்



கன்னலுக்குச் செந்நெல்கதிர்கள்
கழுத்தணைத்து முத்தமிடும் நாடு



### பொருத்துவோம்

- கவிதை வரிகளை வாசித்துப் பொருத்தமான படங்களைக் கண்டு பிடியுங்கள்.

### எழுதுங்கள்

- படங்களுக்குப் பொருத்தமான வேறு கவிதை வரிகள் எழுதுங்கள்.

________________________________________

________________________________________



# கேரளக்கன்னி

பச்சைப் பசியநிலம்
பார்ப்போரைக் கவரும் நிலம்
மெச்சிப் புகழும் நிலம்
மேதினியில் கேரளமாம்!
அரபிப் பெருங்கடலும்
அரணான மாமலையும்
சுரபிப் பேராறுகளும்
சுரந்த நிலம் கேரளமாம்!
கன்னல் கழனிகளும்
கவினான காயல்களும்
துன்னுமிளந் தென்னைகளும்
துவளும் நிலம் கேரளமாம்!
கன்னித் தமிழ் மொழியும்
களிப்பான கன்னடமும்
உன்னும் மலையாளமுடன்
ஒளிரும் மகிழ் கேரளமாம்!
வற்றாத செல்வங்களும்
வளமான சோலைகளும்
பெற்ற திரு நாடிதனைப்
பேணி வணங்கிடுவோம்!.

**– ச. மீனாட்சி நாதன்**

## மெட்டு அமைப்போம்

- பாடலை மெட்டமைத்து இசையுடன் பாடி மகிழுங்கள்.

## இரசிப்போம் எழுதுவோம்

- கேரளத்தைக் கவிஞர் எவ்வாறெல்லாம் வருணிக்கிறார்? குறிப்பு எழுதுங்கள்.

## எனது கிராம அழகு

- உங்கள் கிராம அழகை வருணித்துப் பின்வரும் பாடலை நிறைவு செய்யுங்கள்.

  எங்கும் பசுமையடி – அதை
  எண்ணிப் பார்த்தால் மகிழ்ச்சியடி
  ...............................................................................

# நீலக்கடலின் ஓரத்தில் ...

எங்கும் கண்ணாமூச்சி விளையாடும் செல்லக் குழந்தைகள்! ஆங்காங்கே மணல் வீடுகட்டி விளையாடும் மழலைகள்! ஓ! என்ற



ஓசையுடன் துள் ளிக்குதித்து எதையோ தேடித்தேடி ஏமாந்து திரும்பும் கடலலைகள்! வானும் கடலும் கரு நீலச்சீருடை அணிந்து கைகோத்துச் செல்லும் கோலாகலம்! இதய வானில் சிறகடிக்கும் பட்டாம் பூச்சியாய்க் கரையோரக் காட்சிகள்! எல்லாமே கண்கொள் ளாக் காட்சிகள்! அன் னங்கள் நடைபயில் வது போல் நீரில் மிதந்து வரும் மிதவைகள்!

நாங்கள் மிதக்கும் நகரங்கள்! எனப் பறை சாற்றிக் கரையைச் சேரும் கப்பல்கள்! சுற்றிவரும் சூரியன் போல் கம்பீரமாய் வழிகாட்டி நிற்கும் கலங்கரை விளக்கு! வெள்ளைவெளேரென்று கடற்கரை மணல்! மணல் துகள்களில் முளைத்தவர்கள் போல் திரளான மக்கள்.

தீப்பிழம்போ என எண்ணவைக்கும் அந்திவானம்! அவ்வானில் ஆங்காங்கே வெண்மேகங்கள்! பொன்னோடை போன்ற மேகத்தை முந்திச் சென்று தத்தம் இல்லங்களை அடையத் துடிக்கும் பறவைக் கூட்டங்கள்!

இன்னும் இரை கிடைக்குமா என வானத்தில் வட்டமிடும் கழுகைப் போன்று சுற்றிச்சுற்றி வரும் விமானங்கள்! அதை எட்டிப் பிடிக்க நினைக்கும் சிங்காரச் சிட்டுகள்! கரையோரக் கிளிஞ்சல்கள் தாலாட்டும் வேளை! நம்மை தொட்டுத் தொட்டு விளையாட நினைக்கும் நண்டுகள் மணற்குழிகளில் ஒளிந்து விளையாடுவது ஏனோ?

இத்தகைய எழில்மிகு காட்சிகளால் ஒரு மணப்பெண்ணாகக் காட்சியளித்தது கோவளம். இவள் அரபிக் கடலின் அன்பு மகள். காண்போம்! கண்டு மகிழ்வோம்!! காணவாரீர்!!!

## வருணனை எழுதுவோம்

- **வருணனைச் சொற்களைக் கண்டுபிடியுங்கள்**

  *  கருநீலச் சீருடை          *  சிங்காரச் சிட்டுகள்

  *                              *

- கண்டுபிடித்த சொற்கள் பொருத்தமாக அமையுமாறு வருணனை எழுதுங்கள்.

## படம் வரைவோம்

- "அன்னங்கள் நடைபயில்வது போல்
  நீரில் மிதந்து வரும் மிதவைகள்" பொருத்தமான படம் வரையுங்கள்

## மாற்றி எழுதுங்கள்

- கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை, மாதிரியில் காட்டியவாறு மாற்றி எழுதுங்கள்.

**மாதிரி : மரம் நிழல் தருகின்றது.**
**மரங்கள் நிழல் தருகின்றன.**

❖ மலர் மலர்கின்றது. ______________________

❖ பறவை வானில் பறந்தது. ______________________

❖ பனைமரம் உயரமானது. ______________________

❖ முயல் வேகமாக ஓடியது. ______________________

- கீழ் வரும் வாக்கியங்களை மாதிரியில் தரப்பட்டவாறு மாற்றி எழுதுங்கள்.

**மாதிரி : புறாக்கள் இரை தேடிச் சென்றன.**
**புறா இரை தேடிச் சென்றது.**

❖ மீன்கள் கடலில் வாழ்கின்றன. ______________________

❖ நட்சத்திரங்கள் மின்னின. ______________________

❖ பறவைகள் முட்டை இடுகின்றன. ______________________

❖ பசுக்கள் புல் மேய்ந்தன. ______________________